www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

ஞானம் 6 - ஒலி 02 | 08-01-2023





# வீணிலும் வீண்



## தலையங்கம்

அருட்பணி. சைமன் பீட்டர்

# ஆம் என்றால் ஆம்... இல்லை என்றால் இல்லை...

இயேசு கிறிஸ்துவில் பிரியமான என் உடன் பிறவா சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவரையும் இந்தப் புதிய ஆண்டின் இரண்டாவது ஞான ஒலி மின்னிதழின் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. அனைவருக்கும் என் இதயப்பூர்வமான வணக்கங்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் புதிய ஆண்டில் புதுப்புது திட்டங்களோடும், இலட்சியத்தோடும், தீர்மானங்களோடும் நாம் அனைவரும் நிமிர்ந்த பார்வையோடும், வீருநடை போட ஆரம்பித்திருக்கின்றோம். நாம் நினைத்தபடி நம் இலட்சியங்களை அடையப் போகின்றோம். அதற்கு இப்பொழுதே அனைவரின் சார்பாக உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இலக்கு எட்டிவிடும் தூரம்தான்.

இலக்கில்லாத பயணத்தால் நேர விரயம், சக்தி விரயம், அர்த்தமில்லாத, ஏமாளிப் பயணம் இல்லையா? ஆகவேதான் நாம் அனைவரும் சின்னதோ, பெரியதோ, வத்தலோ, தொத்தலோ எதாவதொரு இலக்கைத் துரத்திக் கொண்டேயிருப்போம்.

இதே போன்றுதான் போனவருடமும் இந்த ஆரம்ப ஆர்ப்பாட்டங்களைச் செய்திருப்போம். கடந்த ஆண்டின் இறுதியில் அன்று நினைத்தபடி செய்திருந்தோமா? அல்லது அதை மீண்டும் தூசிதட்டி இந்த ஆண்டும் அதே பழைய ஆட்டத்தைத் தொடர்கின்றோமா? என்பது நமக்குத் தானே தெரியும்....

சும்மா இருப்பதைவிட இது எவ்வளவே மேல்அல்லவா. பொதுவாக ஒன்றைச் சொல்வார்கள்... உன் இலக்கை நோக்கி வேகமாக ஓடு,.. ஓடமுடியவில்லை என்றால்... நடந்து போ... நடக்கவும் முடியவில்லை என்றால்... நகர்ந்து போ... அதுவும் முடியவில்லை என்றால்... ஊர்ந்து போ... அதுவும் இல்லை என்றால் உருண்டாவது போ...அதுவும் இயலாத காரியமென்றால்... இலக்கை நோக்கி... அதற்கு மேல உன்னால் என்ன செய்ய முடியுமோ? அதைச் செய்து கொண்டே இரு... முயற்சியை விட்டுவிடாதே என்பார்கள்.

அதுதான் நம்மை உயிர்ப்போடு வைத்திருக்கும். மரத்தின் சல்லி வேர்கள் பாறையைக் கூட துளைத்துச் செல்லும், அந்த வேர்கள்கூட தண்ணர் நிலைகளைத் சென்றடைய வேண்டும் என்ற இலக்கு கொண்டுள்ளது.

நடிகர் வடிவேல் அவர்கள் சொன்னதுபோல சும்மா இருந்து பாரு அது எவ்வளவு கஷ்டம்னு புரியும் என்று. காலம் எதையும், யாரையும் சும்மாகவே இருக்க விடாது.

நம் உடலும், மனமும், ஆன்மாவும் நம்மைச் சும்மாகவே இருக்கவிடாது. ஒன்று மற்றதை பாதித்துக் கொண்டும், இயக்கிக் கொண்டேயிருக்கும்.

இந்த இயக்க விதிகளில் முக்கியமான ஒன்று உள்ளது. அது என்னவென்றால்... இலட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும்.

காரியத்தில் கண் வையடா தாண்டவக் கோனே... என்றும் பார்க்காதது மறந்துபோகும் என்றும் சொல்வதன் உட்கருத்து என்னவென்றால்... இலட்சியம் எப்போதும் நம் கண்பார்வையிலேயே வைத்திருக்க வேண்டும்... லாரிகளில் பேட்டரியின் மீது தினமும் என்னைக் கவனி என்று எழுதி வைத்திருப்பதை நாம் பார்த்திருப்போம். வாகனத்தின் சரியான இயக்கத்திற்கு அதை எப்போதும் சரியாக வைத்திருக்க அதைத் தினமும்

பரிசோதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். அதுபோல... நம் இலக்கு சுலபமாக எட்டப்பட வேண்டுமென்றால்... சதாகாலமும அதன் நினைவாகவே இருக்கவேண்டும். நினைவிலும், உண்ணும்போதும், உறங்கும்போதும், எந்த நிலையிலும் நமது இலட்சியக் கனவை அசைபோட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அப்போதுதான் நமக்குள் இருக்கும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும், அது நமது இலட்சியத்தை நனவாக்கும், சுலபமாக்கும்.

இதைத்தான் திருச்சட்ட நூல்களிலலேயே தலைசிறந்த கட்டளை எது என்பதை இயேசு பெருமான் கூறுவதை இங்கு பார்ப்போம்...

திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுவே சோதிக்கும் நோக்குடன்... போதகரே திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது? என்று கேட்டபோது... இயேசு அவரிடம்... உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை என்று கூறினார். (மத்தேயு 22:35-38).

ஆகவேதான் நாம் எதைச் செய்தாலும் அதைப் பற்றிய ஆசையும் நோக்கமும் நம் நாடிநரம்பு ஏன் ஒவ்வொரு அணுவிலும் துளைத்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களால்தான் எதையும் சாதிக்க முடியும். மலையும் ஒரு கடுகாக அவர்களுக்கு மாறிவிடும்.

நிதானமும், பொறுமையும், உழைப்பும் எதையும் சாதிக்கும்.

தண்ணீரைக்கூட ஜல்லடையில் அள்ள முடியும், அத்தண்ணீர் பனிக்கட்டியாக உறையும்வரை காத்திருந்தால் என்பார்கள்.

நல்ல பழக்கமோ, கெட்ட பழக்கமோ எதையும் கற்றுக் கொள்வது ரொம்ப கஷ்டம், அதைவிட அதை விட்டுவிடுவதும் ரொம்ப கஷ்டம். இரண்டிலிம் கதாநாயகர்கள நாமேதான்.

கெட்டதைக் கற்றுக் கொள்வது கஷ்டம், ஆனாலும் சுலபமானது... நல்ல பழக்கங்கள் கற்றுக் கொள்வது கடினம்... ஆனால் அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது இமாலய கஷ்டம்... அதை கற்று அதில் நிலைத்து நின்றால்...நாம் மாமனிதர்கள்தான். அதற்காகத்தான் அனைத்து மார்க்கங்களும், கல்வி நிறுவனங்களும் போராடிக் கொண்டிருக்கின்றது.


எல்லாம் சரிதாய்யா ஏதோ, கெட்டுப்போயாச்சு... அதிலே ரொம்ப தூரம் போயாச்சு... இதிலிருந்து மீள முடியுமா?... முடியும்... எல்லாத்துக்கும் வாய்ப்பு உண்டு ராஜா என்ற சத்தம் நமக்கு உரக்க கேட்கின்றது. யாரும் எல்லாவற்றிலும் பெர்ஃபெக்டா இருக்க முடியாது...அங்காங்கே சறுக்கல்கள், தடுமாற்றங்கள் இருக்கத்தான் செய்யும்.. அதெல்லாம் ரொம்ப சர்வசாதாரணம். எப்போ... சரி நடந்தது நடந்து போச்சு... இப்பவாவது நமக்கு புத்தி வந்துச்சே... இனிமேல் ஒரு முயற்சி செய்து பார்ப்போம் என்று நல்வழியில் நடக்க ஆரம்பிக்கும்போதுதான் இந்தப் பிரபஞ்சம் நமக்கு பேருதவி செய்ய ஆரம்பிக்கும்... அதனோடு ஒத்துப்போனால்... எல்லாம் அற்புதமாக மாறும்... வரலாறு படைப்போம்.

ஒருமுறை குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஒருவர் ஒரு முனிவரிடம் சென்று... ஐயா... இந்தக் குடிப்பழக்கத்திலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. காலையில் சீச்சீ... இந்த சனியனை இன்றோடு விட்டுவிடப்போகின்றேன் என்று முடிவெடுப்பேன்... ஆனால் சாயந்திரமாகும் போது என் புத்தியே மாறிப்போகும்... மீண்டும் குடித்திவிடுகின்றேன். இந்த குடிப்பழக்கத்திலிருந்து விடுபட நீங்கள்தான் எனக்கு ஒரு வழியைக் காட்ட வேண்டும் என்றாராம்.

அதைக் கேட்ட அந்த முனிவர்... சரி... நாளைக்கு வா உனக்கு ஒரு வழி சொல்கிறேன். என்றாராம்... அடுத்த நாள் அவர் அந்த முனிவரைப் பார்க்கச் சென்றபோது... அங்கிருந்த ஒரு தூணை அவர் இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டு... ஐயா தூணே என்னை விட்டுவிடு,,.ஐயோ என்னை விட்டுவிடு என்று கத்திக் கதறிக் கொண்டிருந்தாராம். அதைப் பார்த்த அந்த மதுப்பிரியர்... ஏங்க என்னங்க நீங்கதான அந்தத் தூணக் கட்டிப் பிடிச்சிக்கிட்டு இருக்கிறீங்க... நீங்தான் அந்தத் தூண விடணும்... அதை விட்டுட்டு அந்தத் தூணுக்கிட்ட என்னய விட்டுடு என்னய விட்டுடுனு கெஞ்சிக் கேட்டுக்கிட்டு இருக்கீங்க... தாமாஷா இருக்கு. என்று சொன்னாராம்... அதற்கு அந்த முனிவர்... இல்ல இல்ல இந்தத் தூண்தான் என்னோட கட்டிப்பிடிச்சிட்டு இருக்கு என்று சொன்னாராம்... அதற்கு அவர்... என்னங்க இது கதையா இருக்கு... இந்தத் தூணுக்கு ஒரு சக்தியுமில்ல... அது எப்படி பிடிக்கிட்டு இருக்கும்... நீங்க அதை விட்டுட்டு இந்தப் பக்கம் வாங்க என்று சொன்னாராம். அப்போ அந்த முனிவர்... நீ எனக்குச் சொன்ன அந்த அறிவுரைதான் உனக்கும்... மது பாட்டில் உன்னை பிடிச்சிருக்கல்ல... நீதான் அந்தப் பாட்டில பிடிச்சிருக்க... நீதான் அதை விடணும். அத விட்டுட்டு நீதான் விலகிப் போகணும் என்று சொன்னபோது... அந்தத் தூண் தான அவருக்குப் போதிமரமா ஞானத்தைத் தந்தது. அன்றிலிருந்து அந்த சாத்தானின் மூத்திரத்தை குடிக்கவில்லையாம்.

நமக்கு இருக்கும் மிகப்பெரிய பகைவன், சத்ரு எதுவென்றால் நமது நினைவுகள்தான். எதை நாம் அதிகமான சிந்தித்து, இரசிக்கின்றோமோ... அது நம்மைக் கட்டுப்படுத்தும், அடிமைப்படுத்தும். அதை நோக்கியே நமது கால்கள் செல்லும்...

கனியிருக்கக் காய்க் கவர்ந்தற்று... என்ற நம் தெய்வப்புலவரின் பேரப்பிள்ளைகளல்லவா? நாம், எப்பொழுதும்போல ஞானிகளாகவே இருப்போம் முப்பொழுதும்...



# விவிலியம்
## அறிவோம்-72

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## உடன்படிக்கைச் சடங்கு

உடன்படிக்கை விதிகளைத் தொடர்ந்து உடன்படிக்கைச் சடங்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. உடன்படிக்கை பல சிறுசிறு சடங்குகளைக் கொண்டதாக உள்ளது. அவை ஒவ்வொன்றும் மிகவும் முக்கியமானவை. முதலில் மோசே மட்டும் ஆண்டவரின் அருகில் வர அனுமதிக்கப்படுகிறார். இஸ்ரயேலின் தலைவர்கள் உட்பட மற்றவர்கள் அனைவரும் தூரத்தில் நிற்கப் பணிக்கப்படுகிறார்கள். இந்தத் தலைவர்கள் ஒவ்வொரு குலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். இவர்கள் மக்களின் சார்பில் உடன்படிக்கையின் பிரதிநிதிகளாக மோசேயுடன் நிற்கிறார்கள். மோசே ஆண்டவரிடம் செல்கிறார்; உடன்படிக்கை பற்றிய செய்திகளை ஆண்டவரிடமிருந்து பெற்றபின், திரும்பிவந்து ஆண்டவர் கூறிய அனைத்து வார்த்தைகளையும் விதிமுறைகளையும் மக்களுக்கு அறிவிக்கின்றார். அவர்கள் அனைவரும் ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் செயல்படுத்துவோம் என வாக்குறுதி கொடுக்கின்றனர். இரண்டாவதாக, மோசே ஆண்டவரின் வாக்குகள் அனைத்தையும் எழுதி வைக்கின்றார். பண்டைய காலத்தில் எழுதி வைப்பதென்பது நினைவில் இருத்துவதைக் குறிக்கும். மோசே எழுதி வைத்த இந்த நூல்தான் பிற்காலத்தில் உடன்படிக்கை ஏடு என அழைக்கப்பட்டது. உடன்படிக்கைச் சடங்குகள் அடுத்தநாள் தொடர்கின்றன.

மூன்றாவதாக, அதிகாலையில் மோசே எழுந்து மலையடிவாரத்தில் ஒருபலிபீடம் அமைக்கின்றார். அத்தோடு இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களையும் குறிப்பிடும் வகையில் பன்னிரண்டு தூண்களையும் எழுப்புகின்றார். பலிபீடம் அமைப்பதும் நினைவுத் தூண்களை எழுப்புவதும் உடன்படிக்கைச் சடங்கோடு இணைந்த ஒன்றாகக் கருதப்பட்டது. ஏனெனில் பலிபீடம் கடவுளின் பிரதிநிதியாக நின்றது. பன்னிரு தூண்களும் இஸ்ரயேலின் பன்னிரு குலங்களின் பிரதிநிதிகளாக நிற்கின்றன. நான்காவதாக, இஸ்ரயேல் மக்களின் இளைஞர்கள் எரிபலிகளையும், நல்லுறவுப் பலிகளையும் செலுத்துவதற்கு மோசேக்கு உதவிபுரிகின்றனர். இந்த இளைஞர்கள் இஸ்ரயேலின் தலைமகன்களாக இருக்கலாம் எனக்கருதப்படுகிறது. ஏனெனில் ஆரோனும் அவருடைய வழிமரபினரும் குருக்களாக நியமிக்கப்படுமுன் இஸ்ரயேலின் தலைமகன்கள்தான்; குருத்துவப் பணியைச் செய்தனர் (விப 24:5). பலியிடப்பட்ட விலங்குகளின் இரத்தம் சேமித்து வைக்கப்படுகிறது. பொதுவாக எரிபலிகள் மற்றும் நல்லுறவுப் பலிகள் செலுத்தப்படும்போது பலியிடப்படும் விலங்குகள் முழுவதுமாக எரிக்கப்படுவதில்லை. விலங்கின் ஒரு சிலபகுதிகள் மட்டுமே பலிபீடத்தில் எரிக்கப்பட்டன. மீதமுள்ள பகுதிகள் உணவாக உண்பதற்குத் தயாரிக்கப்பட்டது. எரிபலி மற்றும் நல்லுறவுப்பலி வழிபாடுகளுக்குப் பின் ஒன்றாக அனைவரும் அமர்ந்து உணவருந்துவது வழக்கம்.

உடன்படிக்கைச் சடங்கில் ஐந்தாவதாக வருகின்ற இரத்த வழிபாடு மிகவும் முக்கியமானது. விலங்குகள் பலியிடப்பட்டபோது எடுத்துவைக்கப்பட்ட இரத்தத்தில் ஒரு பாதியை பலிபீடத்தின் மீது மோசே தெளிக்கின்றார். இரத்தம் உயிரின் மூலம். இரத்தம் படைத்தவரான கடவுளுக்கு உரியது. எனவே பலியிடப்படும் விலங்குகளிலிருந்து எடுக்கப்படுகின்ற இரத்தம் பொதுவாக பலிபீடத்தில் ஊற்றப்பட்டது. இவ்வாறு மக்கள் உயிரின் மாட்சியையும் உயிரைப் படைத்தவரையும் நினைவு கூர்ந்தார்கள். பலிபீடம் ஆண்டவரின் பிரதிநிதியாக நிற்கிறது. மறுபாதி இரத்தத்தை மக்களின் மீது தெளிப்பதற்காக மோசே கலங்களில் வைக்கின்றார். ஆறாவதாக, மக்கள் மீது இரத்தத்தைத் தெளித்து உடன்படிக்கையை உறுதிசெய்வதற்குமுன் மோசே மீண்டுமொருமுறை உடன்படிக்கை ஏட்டிலிருந்து ஆண்டவருடைய வார்த்தைகளையும் உடன்படிக்கை விதிகளையும் மக்கள் கேட்கும்படி வாசிக்கின்றார். உடன்படிக்கை ஏட்டிலிருந்து வாசிப்பது உடன்படிக்கையின் ஒரு சிறப்புக் கூறு. பிற்காலத்தில் உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டபோதெல்லாம் உடன்படிக்கை ஏட்டிலிருந்து வாசிப்பதைப் பார்க்கிறோம் (காண் யோசுவா 24:25-27; 2 அரச 23:2; நெகேமி 8:5-9). இதன் வழியாக உடன்படிக்கை விதிகளாகக் கொடுக்கப்பட்ட சட்டங்கள் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றன. ஆண்டவரின் இந்த உடன்படிக்கையை மக்கள் ஏற்பதன் அடையாளமாக அவர்கள் மீண்டும் ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம் என்று கூறி ஆண்டவருக்குத் தங்களை அர்ப்பணிக்கின்றனர். உடன்படிக்கைச் சடங்கின்போது இரண்டாவது தடவையாக மக்கள் இந்த வாக்குறுதியைக் கொடுக்கின்றனர்.

ஏழாவதாக, மோசே கலங்களில் வைத்திருந்த இரத்தத்தை எடுத்து மக்களின்மேல் தெளிக்கின்றார். பொதுவாக உடன்படிக்கைச் சடங்கின்போது மக்கள்மீது இரத்தம் தெளிக்கப்படுவதில்லை. மக்களின் பிரதிநிதிகளாக கட்டப்படுகின்ற தூண்களின்மீது தெளிக்கப்படலாம். சீனாய் உடன்படிக்கையில் மக்கள்மீது இரத்தம் தெளிக்கப்படுவது வித்தியாசமாக உள்ளது. மேலும் இரத்தத்தைத் தெளிக்கும்போது இவ்வனைத்து வார்த்தைக்குமிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ என மோசே கூறுகின்றார். இது கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற ஒருசிறப்பு உறவைக் குறிப்பதாக உள்ளது. இரத்த வழிபாடு இரண்டு உண்மைகளைக் குறித்து நிற்கிறது எனலாம்.முதலாவதாக, இரத்தம் கடவுளோடு ஒரு குடும்ப உறவை ஏற்படுத்துகிறது. இரத்தம் பலிபீடத்தின் மேலும் இஸ்ரயேல் மக்கள் மேலும் தெளிக்கப்படுவதால் இஸ்ரயேல் மக்கள் இப்போது கடவுளின் குடும்பமாக மாறுகிறார்கள். இரண்டாவதாக, இரத்தம் உடன்படிக்கையை மீறுவதற்கு எதிரான ஒரு கூற்றாகவும் உள்ளது. அதாவது, எனது உடன்படிக்கைக் கடமைகளிலிருந்து நான் தவறினால் இந்த விலங்குகளின் இரத்தம் சிந்தப்பட்டதுபோல எனது இரத்தமும் சிந்தப்படட்டும் என்று கூறுவதாகவும் உள்ளது. இந்த உடன்படிக்கைச் சடங்கில் கடவுளும் இஸ்ரயேல் மக்களும் சரிசமமானவர்களாகப் பார்க்கப்படுகின்றனர்; ஏனெனில் இருவர்மீதும் இரத்தம் தெளிக்கப்படுகிறது.

சீனாய் உடன்படிக்கை இரத்த வழிபாட்டுடன் நிறைவுபெறவில்லை. அதன்பின் ஓர் உறவு விருந்து நடைபெறுகிறது. இரத்த வழிபாடு மலையடிவாரத்தில் நடக்கிறது. இரத்த வழிபாடு முடிந்தபின் மோசேயும் மற்றும் தேர்வுசெய்யப்பட்ட இஸ்ரயேலின் தலைவர்கள் எழுபத்து நான்கு பேரும் மலையில் மேலேறிக் கடவுளின் இருப்பிடத்திற்குச் செல்கிறார்கள். இந்த எழுபத்து நான்கு தலைவர்களும் இஸ்ரயேல் மக்களின் பிரதிநிதிகளாகச் செல்கிறார்கள். மலையில் அவர்கள் இஸ்ரயேலின் கடவுளைக் கண்டார்கள் என நாம் வாசிக்கிறோம். திருவிவிலியத்தில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே மக்கள் கடவுளைக் கண்டார்கள்; அவர் முன்னிலையில் விருந்துண்டார்கள் என பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவர்கள் கடவுளைக் கண்டனர்; உண்டு குடித்தனர் என்ற வார்த்தைகள் இந்த உண்மையை உரக்கக் கூறுகின்றன. பண்டைய காலமுதல் குடும்பங்களின் ஒற்றுமையும் உறவும் ஒன்றாக உண்பதில்தான் வெளிப்படுத்தப்படுகிறது. உறவில்லாதவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உண்பதைப் பெரும்பாலும் மக்கள் விரும்புவதில்லை. ஒன்றாக அமர்ந்து உண்பது ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதையும், ஒருவரையோருவர் மதிப்பதையும், இணைந்து வாழவிரும்புவதையும் வெளிப்படுத்துகிறது. சீனாய் மலையில் கடவுளின் முன்னிலையில் இஸ்ரயேலின் தலைவர்கள் பங்குபெறும் இந்த விருந்து சதாரணவிருந்தல்ல. இது ஒரு தெய்வீக உடன்படிக்கைவிருந்து. இந்தவிருந்தில் கடவுள் தன்னைத் தன் மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். கடவுளை நேருக்குநேர் காண்பது ஆபத்தானது என்ற கருத்து அக்காலத்து மக்களிடையே இருந்தது (காண் தொநூ 16:7-13;

28:16-17; 32:24-30; நீத 6:22-23). இங்கே இஸ்ரயேல் மக்களின் பிரதிநிதிகள் உடன்படிக்கை விருந்தில் பங்குகொள்கின்றனர். கடவுளின் திருமுன்னிலையில் அவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஏனெனில் அவர்கள் கடவுளால் அழைக்கப்பட்டு அங்கே சென்றார்கள். எனவே அவர்கள் கடவுளின் பாதுகாப்பில் உள்ளார்கள்.

இஸ்ரயேல் மக்களின் பிரதிநிதிகள் ஆண்டவரைக் காண்கின்றனர். அவருடைய பாதங்களின் கீழுள்ள தளம் நீலமணிக்கல் இழைத்த வேலைப்பாடு போன்றும், தெள்ளியவான் வெளி போன்றும் இருந்தது என வாசிக்கிறோம். ஆண்டவர் மலையின்மேல் நின்றுகொண்டிருந்தாரா? அமர்ந்திருந்தாரா? அவருடைய உருவம் எப்படியிருந்தது? என்பதைப் பற்றியெல்லாம் எதுவும் எழுதப்படவில்லை. மெசப்பெத்தோமியாவில் உள்ள சில மரபுகள் மூன்று வானங்கள் இருப்பதாகப் பேசுகின்றன. ஒவ்வொரு வானத்தின் தளமும் விலையுயர்ந்த குறிப்பிட்ட மாணிக்கக் கற்களால் அமைக்கப்பட்டிருந்தது எனக் கூறுகின்றன. மூன்று வானங்களிலும் நடுவில் உள்ள வானத்தின் தளம் நீலமணிக்கற்களால் அமைக்கப்பட்டிருக்கும். இதுதான் வானத்திற்கு நீலநிறத்தைக் கொடுக்கிறது எனவும் கூறப்பட்டது. இந்த நடுவானத்தில்தான் பெரும்பாலான கடவுளர்களின் உறைவிடங்கள் இருந்தன என்றும் இந்த மரபுகள் கூறுகின்றன. உடன்படிக்கை விருந்து ஓர் உறவுவிருந்து. இந்த உறவுவிருந்து கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையில் உள்ள குடும்ப உறவை வெளிப்படுத்துகிறது. இந்த உடன்படிக்கை விருந்து எவ்வாறு முடிவடைந்தது என்பது பதிவுசெய்யப்படவில்லை. விருந்து முடிந்ததும் அனைவரும் எழுந்து ஒருவரையொருவர் வாழ்த்தியபின் பிரிந்து சென்றிருக்கலாம். விருந்து முடிந்தபின் மோசேயையும் இஸ்ரயேல் மக்களின் எழுபத்து நான்கு தலைவர்களையும் மீண்டும் மலையடிவாரத்தில் சந்திக்கிறோம். அவர்கள் மலையடிவாரத்தில் இருக்கும்போதுதான் ஆண்டவர் மோசேயை நோக்கி, என்னிடம் மலைமேல் ஏறிவந்து இங்கேயே இரு. அவர்களுக்குக் கற்பிக்க நான் எழுதியுள்ள சட்டதிட்டங்கள் அடங்கிய கற்பலகைகளை உன்னிடம் அளிப்பேன் என்கிறார். மோசே தன்னுடைய துணையாளரான யோசுவாவையும் அழைத்துக்கொண்டு மலைக்குச் செல்கிறார். மலையின்மேல் ஏறுகையில் மோசே இஸ்ரயேலின் தலைவர்களை நோக்கி நாங்கள் உங்களிடம் திரும்பி வரும்வரை நீங்கள் இவ்விடத்திலேயே எங்களுக்காகக் காத்திருங்கள். இதோ ஆரோனும், கூரும் உங்களோடு இருக்கிறார்கள். வழக்கு ஏதுமிருப்பவன் அவர்களை அணுகட்டும் எனக் கூறி மக்களைக் கண்காணித்துப் பாதுகாக்கும் பொறுப்பை அவர்களிடம் விட்டுச்செல்கிறார்.

மோசே மலையின்மேல் ஏறிச் சென்றதும் ஒரு மேகம் மலையை மூடுகிறது. மேகம் மலையை மூடுவது கடவுளின் பிரசன்னத்தைக் குறிக்கும். மேலும் மோசேயின் வருகையைக் கடவுள் அறிந்து ஏற்றுக்கொள்வதாகவும் கருதலாம். ஆறு நாள்கள் மேகம் மூடிய மலையில் மோசேயும் யோசுவாவும் தங்கியிருந்தபின், ஏழாம் நாள் கடவுள் மோசேயை மேகத்தினின்று அழைத்துத் தன்னிடம் வரச்செய்கின்றார். கடவுளின் மலைக்கு ஏறிச்சென்ற மோசே நாற்பது பகலும் நாற்பது இரவும் அங்கேத் தங்கியிருந்தார் என வாசிக்கிறோம். விவிலியத்தில் நாற்பது என்ற எண் பல இடங்களில் வருகிறது. நாற்பது ஒரு தலைமுறையின் காலம் (தொ.நூ 25:20), இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் சுற்றித் திரிந்த ஆண்டுகளின் எண்ணிக்கை (விப 16:35; எண் 14:33); ஒரு நீதி அரசர் அல்லது தலைவரின் ஆட்சிக்காலம் (நீத 3:11; 13:1). நாற்பது என்ற எண் பல இடங்களில் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கும்போது இது கலாச்சாரச் சிறப்பு வாய்ந்தது; இலக்கியச் சிறப்புமிக்கது எனக்கூறலாம். இந்தக் காலகட்டத்தில் ஆண்டவர் உடன்படிக்கை விதிகளைக் கற்பலகைகளில் எழுதி மோசேயிடம் கொடுக்கின்றார். பண்டைய மேற்காசிய நாடுகளில் முக்கியமான ஆவணங்கள், சட்ட விதிகள் மற்றும் இராணுவ வெற்றிகள் போன்றவற்றை பாறைகள் அல்லது கற்பலகைகளில் எழுதிவைப்பது வழக்கம். சீனாய் மலையில் கடவுள் மோசேயிடம் கொடுத்த கற்பலகைகளும் இவ்வகையைச் சார்ந்ததாகவே இருக்கவேண்டும். கடவுள் எழுதிய இந்தக் கற்பலகைகளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது தெரியாது. ஏனெனில் கடவுளின் கைகளால் முதலில் எழுதப்பட்ட இந்தக் கற்பலகைகளை மோசே உடைத்துவிட்டார் (விப 32:19). பண்டைய மரபுகளின்படி இந்தக் கற்பலகைகளில் பத்துக்கட்டளைகள் எழுதப்பட்டிருந்தன. உடைக்கப்பட்ட கற்பலகைகளுக்குப் பதிலாக மீண்டும் கடவுள் கற்பலகைகளில் எழுதுகிறார் (விப 34:1). கடவுள் இரண்டாவதாக எழுதிய கற்பலகைகள் உடன்படிக்கைப் பேழையில் வைக்கப்பட்டன (இச 10:5).

பயணம் தொடரும்...



மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஸ்டீபன் கஸ்பார்**

பங்குத்தந்தை

**திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்**

காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்

# திருக்காட்சிப் பெருவிழா

08-01-2023

முதல் வாசகம்

**எசாயா 60:1-6**

இரண்டாம் வாசகம்

**எபேசியர் 3:2-3**

நற்செய்தி வாசகம்

**மத்தேயு 2:1-12**

# ஞாயிறு மறையுரை

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான இறைச் சமூகமே இன்று 2023ம் ஆண்டின் இரண்டாம் ஞாயிறு. இந்தப் புத்தாண்டின் எட்டாம் நாள். இறைச் சமூகமாய் இணைந்து இறைவனின் திருக்காட்சிப் பெருவிாவைக் கொண்டாடி அவரின் சாட்சியங்களாக மாற அழைக்கும் இறைவார்த்தைகளை உள்வாங்கக் கூடி வந்துள்ளோம்.

அன்பானவர்களே, கடந்த 2022 டிசப்பர் 24 அன்று நள்ளிரவிலே நாம், ஒன்று கூடி கிறிஸ்து பிறப்பு விழாவிழாவை, தந்தைக் கடவுள் தம் ஒரே மகனான இயேசுவில் தன் அன்பை முழுமையாகப் பகிர்ந்து கொண்டதை பகிர்வின் விழாவாகக் கொண்டாடினோம். ஆனால் இன்று நாம் கடவுள் தம்மை உலகுக்கு வெளிப்படுத்தும் விழாவைத் திருக்காட்சி விழாவாக நாம் கொண்டாடி இன்று இங்கே கூடியிருக்கின்றோம்.

இந்தத் திருக்காட்சி விழாவிலே நம் கண்முன் கதாநாயகர்களாக நிற்பவர்கள் மூவர். கஸ்பார், மெல்கியூர், பல்தசார் என்ற மூன்று ஞானிகள் மூன்று அரசர்களாவர். இவர்கள் மூவரும் கீழ்த்திசையிலிருந்து மேல்திசை நோக்கி விண்மீனால் வழி நடத்தப்பட்டு மீட்பரை, யூதரின் அரசரைத் தேடி வந்தவர்கள். வழி நடத்தி வந்த விண்மீன் அவர்கள் எருசலேம் நகரை அடைந்தததும் மறைந்துவிட்டது. திணறினர். திக்குமுக்காடித் திரும்பவில்லை.மாறாக ஏரோது மன்னனின் அரண்மனைக்குள் சென்று மன்னன் ஏரோதிடம் யூதரின் அரசர் பிறந்திருக்கின்றாரே, அவர் எங்கே? அவரைக் காண நாங்கள் வந்தோம் என்று கூறினார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட யூதேயா நாடு முழுவதும் என் மன்னன் ஏரோதும் கலங்குகிறான் என வாசகிகக் கேட்டோம் (மத்தேயு 2:2)

இயேசு அரசர் என்று மூன்று ஞானிகள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறார். யூதரின் அரசன் இயேசுவைப்பற்றி ஏரோதும் அறிய வேண்டுமென்ற கடவுளின் திட்டம் நிறைவேறவே வழிநடத்திய விண்மீன் தடைப்பட்டது. ஏரோது இறைத்திட்டத்தை ஏற்க மறுக்கிறான். ஞானிகளை தனியே அழைத்து விபரத்தைக் கேட்டறிந்து, தன் மறைவல்லுநர்களை அழைத்து வேதத்தைப் புரட்டவைத்து, யூதரின் அரசர் எங்கே பிறப்பார் என அறிய வருகிறான். தாவீதின் ஊரிலே அவர் பிறப்பார் என அறிந்து கொண்டான். இந்த ஏரோதால் இதனை ஏற்க முடியவில்லை. ஏனென்றால் தனக்கு எதிராய் எழுந்த தன் மகனை, மருமகனை, தன் சகோதரனின் மனைவியைக் கொன்றுபோட்டவன். எப்படியாவது இந்த யூதரின் அரசனை-புதிதாகப் பிறந்த அரசனையும் கொன்றுபோடத் திட்டமிட்டு, ஞானிகளைத் தனியே அழைத்து நீங்கள் அந்தக் குழந்தையைப் பார்த்துவிட்டு திரும்ப வந்து என்னிடம் தெரிவியுங்கள், நானும் காண ஆவலாயிருக்கிறேன் எனச் சொல்லி அனுப்புகிறான்.

அரண்மனையைவிட்டு வெளியே வந்ததும், தடைப்பட்ட விண்மீன் அவர்கள் கண்ணில்பட்டது. அவர்கள் தாவீதின் ஊரில் மாடடைக் குடிலைச்

சென்றடையும்வரை, அவர்களுக்க வழிகாட்டி முன் சென்றது. யூதரின் அரசனான குழந்தை இயேசுவைக் கண்டு தெண்டனிட்டு வணங்கித் தாங்கள் கொண்டுவந்த காணிக்கையைச் செலுத்தினர். இறைத்தூதரால் ஏரோதிடம் தரும்பிச் செல்லவேண்டாமென்றும், வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினர். ஞானிகளுக்காய்க் காத்திருந்த எரோதின் கண் பூத்துவிட்டது. ஞானிகளா ஏமாற்றப்பட்டதால் கோபங்கொண்டு ஆணை பிறப்பித்து 2 வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளைக் கொன்றுபோட பெத்தலகம் மற்றும் அதனைச் சுற்றுயுள்ள பகுதிக்கும் கொலைஞர்களை அனுப்பினான்.

குழந்தையைக் கொல்லப் போகும் வெய்தி சூசைக்கும் மரியாவுக்கும் தூதரால் கொல்லப்பட்டதால் குழந்தை இயேசுவைத் தூக்கிக் கொண்டு எகிப்பது சென்று அங்கே எகிப்தில் தங்கினார்கள் என்பதையும், இறைச் செய்தியாய் இன்று நாம் கேட்டோம். மன்னன் ஏரோதின் மறைவுக்குப் பின்னர் எகிப்திலிருந்து கலிலேயாப் பகுதியிலுள்ள நாசரேத்தில் வந்து தங்கியதை நாம் அறிவோம். இவ்வாறு உயிரைப் பறிக்க, எடுக்க நினைத்த ஏரோது கொலைஞர்கட்கும் திருக்காட்சி அருளப்படவில்லை. மாறாக கொடுக்கச் சென்ற இடையர்கள், ஞானிகள் இவர்கட்கே காட்சி அருளப்படுகிறது. இதுவே இறைத்திட்டம்.

இந்த 2023-ம் ஆண்டிலே திருக்காட்சி விழா கொண்டாடக்கூடியுள்ள நாம் யாராக யாராக நம்மை உருவாக்கி இயேசுவைக் காண குடிலில் முன் குழுமிவந்துள்ளோம். இடையர்களாகவா? மூன்று அரசர்களாகவா? நாம் ஒரு பொழுதும் எரோதாகவோ? கொலைஞர்களாகவோ? நம்மை மாற்றிக் கொள்ளக்கூடாது. கொடுத்து மகிழ்ந்து, காட்சியைக் கண்டு கழித்துக் சாட்சி பகரும் இடையர்களாக, மூன்று ஞானிகளாக வாழ வரம் கேட்போம்.

திருக்காட்சிப் பெருவிழாவிலே எப்படி நாம் சாட்சிகளாவது. இங்கே ஒரு நிகழ்வைப் பதிவு செய்ய விரும்புகிறேன். அந்தப் பங்குவிழா முடிந்த இரவிலே ஒரு புனிதரின் நாடகம் நடந்தது. விடிய விடிய நடந்தது. அந்தப் பெரியவரும் கலந்து கொண்டு அனைவரும் நாடகம் முடிந்து பாய்களைச் சுருட்டிச் சென்ற பிறகு மைதானத்திற்கு வந்து பார்த்தார். ஒரு நெக்லஸ் பளபளத்துக் கிடந்ததைப் பார்த்தார். எடுத்தார். உரியவரிடம் கிடைக்கப் பங்குத் தந்தையின் கதவை அதிகாலை 3 மணிக்குத் தட்டித் தந்ததாக அந்தவார அன்பியத்தில் பகிர்ந்தார். பங்குத்தந்தை மறுநாள் பூசையின் முடிவில் அறிவித்தார். இழந்த பெண்ணோ, இழந்ததைப் பெற்று இன்புற்றாள். அந்த அன்பியத்தின் முடிவில் மன்றாட்டு ஏறெடுக்கப்பட் பொழுது ஒரு சிறுமியின் பகிர்வில் தாத்தா செஞ்ச நல்ல காரியம் எனக்குப் பிடித்தது. இயேசுவே என்னையும் அசீர்வதியும், நானும் தாத்தாவைப்போல பிறருடைய உடைமையை எடுத்துக்கொள்ளாது பொது இடத்தில் நானும் பிறரின் உடைமையை உரியவரிடம் சேர்க்கும் பண்பை பகிரும் பண்பை எனக்குத் தாரும் என அச்சிறுமி செபித்த விதம், அந்த அன்பியத்தில் என்னைத் தொட்டது. இதுதான் உண்மையான பகிர்தல். இதுதான் சாட்சிகளாய் மாறுவதாகும். நாமும் சாட்சிகளாய், இயேசுவின் சாட்சிகளாய் வாழ கடவுளின் காட்சிப் பெருவிழவை அர்த்முள்ள விதத்தில் கொண்டாடுவோம்.

— ஆமென்



# ஆண்டவருடைய திருக்காட்சி பெருவிழா

எசா 60:1-6, எபே. 3:2-3, 5-6, மத். 2:1-2

**08-01-2023**

## திருப்பலி முன்னுரை




பா. சேவியர்
திண்டுக்கல்


ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடன் உரிமையாளர்களும், வாக்குறுதியின் உடன் பங்காளிகளுமான அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவருடைய திருக்காட்சி பெருவிழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

திருக்காட்சி பெருவிழா, இயேசுவை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்தும் விழா. நாம் அவர் அருகே நெருங்கி வர நம்மை அழைக்கும் விழா. அவரை நாம் எந்த மனநிலையோடு தேடவேண்டும் என்பது குறித்து சிந்தனையைத் தூண்டும் விழா.

பொன்னோ பொருளோ எதுவுமே ஆண்டவரைவிட பெரிதல்ல என்பதை உணர்ந்த ஞானிகள் அவரை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கியதைப் போல, நாமும் இந்த உலகத்தில் அவரை விட சிறந்தது, உயர்ந்தது எதுவுமில்லை என்பதை முழுமையாக உணந்து அவர் முன் தெண்டனிட்டு விழுந்து வணங்கி நம்மையே அவருக்கு அர்ப்பணிக்க வழி காட்டுகிறது இன்றைய நற்செய்தி.

தூய மனத்தோடு குழந்தை இயேசுவைத் தேடி வந்த மூன்று ஞானிகளும் அவருடைய தரிசனத்தைக் கண்டார்கள். ஏழை எளிய இடையர்களுக்கும் ஆண்டவருடைய தரிசனம் கிடைத்தது. ஆனால், அவரைக் கொல்ல வேண்டும் என்ற தீய எண்ணத்தோடு தேடிய ஏரோது மன்னனுக்கோ கடவுளின் தரிசனம் கிடைக்கவில்லை.

கடவுளை எத்தகைய மன நிலையோடு தேடிச் செல்கிறோமோ அதற்கேற்பத்தான் அவரது ஆசி கிடைக்கும் என்பதை இன்றைய வார்த்தை வழிபாடு எடுத்து சொல்கிறது.

இந்த வாழ்க்கையே ஒரு தேடல்தான், தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும், தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும். தனி மனித வாழ்வில் அமைதியைத் தேடுவோம். குடும்ப உறவுகளில் அன்பைத் தேடுவோம், சமூக வாழ்வில் ஒற்றுமையைத் தேடுவோம். மூன்று ஞானிகளைப்போல் ஆண்டவரை முழு உள்ளத்தோடும், தூய மனத்தோடும் தேடுவோம். இறைவன் நமக்களிக்கும் முடிவில்லா வாழ்வை கொடையாகப் பெறுவோம். அதற்காக இறையருளை வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

rawpixel

## முதல் வாசக முன்னுரை

உலகத்தை மீட்க இயேசு பிறப்பார். விண்மீன்கள் வழிகாட்ட உலகின் பல திசைகளில் இருந்து அவரை தரிசிக்க ஞானிகள் வருவர் என்பதை கிறிஸ்து பிறப்பதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கமாக இறைவாக்கு உரைக்கிறார் எசாயா. இது ஆருடம் அல்ல அருளுரை, இது சோதிடமல்ல சத்தியம். இயேசுவின் இறைக்காட்சி யால் அனைத்து மக்களும் வாழ்வு பெறுவர் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இறைமகன் இயேசு மீட்பையும், நற்செய்தியையும் யூத மக்களுக்காக மட்டுமல்ல, உலக மாந்தர் அனைவருக் காகவும் கொண்டு வந்தார். இதனை நாம் மற்றவருக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற மறை உண்மையை தூய பவுல் அடிகள் இன்றைய இரண்டாம் வாசகத்தின் மூலம் எடுத்து ரைக்கிறார். இயேசுவின் மீட்புச் செயல் அனைவருக்கும் உரியது என்பதை சுட்டிக்காட்டும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. மாட்சிமை கொண்ட தந்தையே இறைவா, உம்மிடமிருந்து பெற்ற ஞான ஒளியைக் கொண்டு இப்பூவுலகின் மக்களை வழி நடத்த உம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட உம் திருஅவையின் தலைவரான எம் திருத்தந்தை, மேதகு ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்கன்னியர் அனைவரும் தங்களின் சொல்லாலும், செயலாலும் இவ்வுலக மாந்தர் அனைவரையும் வழி நடத்தி, நெறிப்படுத்தி, உமது ஒளியின் பாதைக்கு அழைத்து வந்திடும் ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் அவர்களுக்கு நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அருளும் தூய்மையும் நிறைந்த தந்தையே இறைவா, உம் திருமகன் இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொண்ட நாங்கள், உலகில் உள்ள மற்றவருக்கும் அவரது நற்செய்தியை கொண்டு செல்லும் கடமை உள்ளவர்கள் என்பதை உளமாற உணர்ந்து, கிறிஸ்து வை முழுமையாக அறிவிக்கவும், ஞானிகளைப் போல் எங்களையே முழுமையாக அவருக்கு அர்ப்பணிக் கவும் வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகின் ஒளியே இறைவா, உம் ஒளியின் வழியைப் பின்பற்றி நடந்தால் ஒளியின் மக்களாக இருக்க முடியும். உம் தரிசனத்தைக் கண்டு மகிழ முடியும் என்பதை அன்று கீழ்த்திசை ஞானிகள் உணர்ந்ததைப் போல் நாங்களும் உணரவும், அந்த ஞானிகளை இயேசு விடம் இட்டுச் சென்ற விண்மீன்களைப் போல் மற்றவர்க்கு வழிகாட்டியாக வாழ்ந்து அவர்களை உம்மிடம் அழைத்து வரவும், தாழ்ச்சியான மனநிலையோடு நம்பிக்கையின் பாதையில் நடந்து உம்மைக் கண்டு மகிழவும் வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நோய் போக்கும் அருமருந்தே, நலம் பயக்கும் திருவிருந்தே, வதைக்கின்ற நோயால் வாடுகின்ற ஒவ்வொருவரையும் உம் கருணைக் கண்கொண்டு பாரும். வாட்டுகின்ற நோய்களில் இருந்து அவர்கள் விடுதலை அடைந்து நற்சுகம் பெற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

rawpixel



# ஆண்டவருடைய திருமுழுக்கு விழா

எசா 42:1-4, 6-7, தி.ப. 10:34-38, மத். 3:13-17

**09-01-2022**

**திருப்பலி முன்னுரை**




பா. சேவியர்
திண்டுக்கல்


அன்பு இறைமக்களே, இன்று ஆண்டவருடைய திருமுழுக்குப் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ, திருமுழுக்கின் மேன்மையை உணர்ந்து, உலகு சார்ந்த தீய நாட்டங்களை விட்டொழித்து, நேர்மையுடனும், இறைப் பற்றுடனும் வாழத் தாய் திருச்சபை நம்மை அழைத்துள்ளது.

ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா, கிறிஸ்து பிறப்புக் காலத்தின் முடிவாகவும், ஆண்டின் பொதுக்காலத்தின் தொடக்க மாகவும் அமைகிறது. இயேசு பெற்ற திருமுழுக்கு அவர் இவ்வுலகில் தன்னுடைய இறையாட்சிப் பணியைத் தொடங்க இருக்கிறார் என்பதன் அடை யாளமாக இருக்கிறது. தந்தை, மகன், தூய ஆவி மூவரும் ஒரே நேரத்தில், ஒன்றாய் காட்சி தந்த முதல் நிகழ்ச்சி இறைமகன் இயேசு திருமுழுக்கு பெற்ற இந்த நிகழ்ச்சிதான்.

திருமுழுக்கின் வழியாக பாவங் கள் கழுவப்பட்டு, ஆண்டவரின் அன்பு மக்களாக புதுப்பிறப்பு எடுத்துள்ள நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் இறையாட்சியின் மதிப்பீடுகளின்படி வாழ வேண்டும் என்பது தான் இந்நாள் நமக்குத் தருகின்ற மேலான அழைப்பாக இருக்கின்றது.

இவர்கள் என் அன்பார்ந்த மக்கள், இவர்களிடம் நான் பூரிப் படைகிறேன் என்று நம் வானகத் தந்தை, நம்மைப் பார்த்து பெருமைப்படும்படி நாம் வாழவும், நமது ஆண்டவராகிய இயேசுவின் வாழ்வைப் போல் நமது வாழ்வும் ஆவியானவரின் உந்துதலுக்கு உகந்த வாழ்வாய் அமையவும், நாம் என்றும் ஆவியான வரின் ஆலயமாக திகவும் இத்திருப்பலி வழியாக இறையருளை வேண்டுவோம்.

வாருங்கள் இறைமக்களே, யோர் என்னும் ஊற்றும், தான் என்னும் ஊற்றும் சங்கமமாகும் யோர்தான் என்னும் இத்திருப்பலியில் பக்தியுடன் மூழ்கி, நம்மேல் படிந்துள்ள பாவக் கறைகளைக் கழுவி, நம் வாழ்வை புதுப்பித்துக் கொள்வோம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசுவின் திருமுழுக்கு விழாவைக் கொண்டாடுகின்ற இன்றைய நாளில் ஆண்டவரின் ஊழியனைப் பற்றி இறைவாக்கினர் எசாயா உரைக்கும் செய்திகள் இயேசுவுக்குப் பொருந்தி அமைவதாய் உள்ள வாசகத்தை திருஅவை நமக்கு வழங்கியுள்ளது. சடங்குகள், சம்பிரதாயங்கள், விவாதங்கள் எல்லாம் தாண்டி திருமுழுக்கின் தரமான அர்த்தத்தை எடுத்துரைக்கும் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கொர்னேலியுவின் வீட்டில் குடியிருந் தவர்களுக்கு பேதுரு வழங்கிய அருளுரை இன்றைய இரண்டாம் வாசகமான அமைந்துள்ளது. யோவானிடம் திருமுழுக்குப் பெற்ற இயேசு, எம்முறையில் இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுகிறார் என்பதே இவ்வாசகத்தின் மையக்கருத்து. திருமுழுக்கு விழாவிற்கு ஏற்ற கருத்தாழமிக்க இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. நிலை வாழ்வை உரிமைப் பேறாக வழங்குகின்ற அன்பு இறைவா, பாவத்தால் பார்வை இழந்தோரின் அகக் கண்களைத் திறக்கவும், அலகையின் தலைகளை அறுக்கவும், பாவ இருளில் இருப்போரை மீட்டு, உம் திருஒளிக்கு அழைத்து வரவும் உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட உம் திருஅவையின் தலைவர்களை ஆசீர்வதியும். இவ்வுலக மாந்தருக்கு அவர்கள் உடன்படிக்கையாகவும், ஒளியாகவும் திகழ்ந்து, மக்களை கரம் பிடித்து நடத்திட அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும் ஆரோக்கியத்தையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, திருமுழுக்கு என்பது வாழ்க்கையின் மையம். அதுவே வாழ்வின் துவக்கம். அதுவே உம்மையும் எம்மையும் இணைக்கும் பாலம் என்பதை நாங்கள் உளமாற உணர்ந்து, தூய ஆவிக்கு சாட்சியமாகவும், அவரின் ஆலயமாகவும் வாழ்ந்து, நீ என் அன்பார்ந்த மகன், மகள் என்று உம்மால் அழைக்கப்படும் பேற்றினை பெற்றிட வரம் அருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மன்னிப்பதில் மகிழ்ச்சி காணும் இறைவா, அறிந்தும் அறியாமலும் நாங்கள் செய்த பாவங்களை மன்னியும். திருப்பலி என்னும் யோர்தானில் மூழ்கி எழுகிறோம். எம் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப் படுத்தும். சொல்லாலும் செயலாலும் சிந்தையாலும் உமக்கேற்ற பிள்ளைகளாக வாழ்ந்து, நிறை வாழ்வையும், அதனைத் தொடர்ந்து நிலைவாழ்வையும் பெற்று மகிழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எல்லா நெறிகேடுகளில் இருந்தும் எம்மைமீட்கின்ற அன்பு இறைவா, எம் நாட்டை ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் உம்மைப்போல் மக்களை நேசித்து, அன்புப் பாதையில் வழிநடத்தவும், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வளமான வாழ்வை ஏற்படுத்தவும். தாழ்ச்சி, உண்மை, நீதி, நேர்மை, தன்னலமின்மைபோன்ற பண்புகளைக் கொண்டு செயலாற்றவும், மக்களின் நலனுக்காகவும் நட்டின் முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் பணியாற்றவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்


சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM




## குறள் -27

சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு

### குறள் விளக்கம்

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.

### சிந்தனை

உலகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் வீழ்ச்சிகளுக்கும் காரணம் மனிதனின் அறிவாற்றலே. அவனின் ஆர்வமும் நம்பிக்கையும் புதிய கண்டுபிடிப்புகளை தந்து உலகை இயக்கி வருகிறது. இந்த நவீன கணினி உலகம் மனிதனின் உள்ளங்கையில் தவழ்கிறது என்றாலும் மிகையாகாது.

புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகள் ஒன்றைக் கண்டுபிடிக்க மேற்கொள்ளும் முயற்சிகளை நினைத்தால் வியப்பாய் இருக்கிறதல்லவா என்று அவரிடம் ஒருவர் கேட்டார். ஆராய்ச்சியாளர் சொன்னார். அதைவிடவும் வியப்பளிக்கிற விஷயம் ஒன்று இருக்கிறது. பெரும்பாலான விஞ்ஞானிகள் ஒரேயொரு கண்டுபிடிப்போடு நிறைவடைவதில்லை. எடிஸன், 1093 கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெற்றிருந்தார். தங்களால் நூற்றுக்கணக்கான விஷயங்களை கண்டுபிடிக்க முடியுமென்ற நம்பிக்கைதான் ஆச்சரியம்! என்றார் ஆராய்ச்சியாளர். நம்புங்கள், எல்லையில்லாத ஆற்றல் எல்லோரிடமும் இருக்கிறது.

வேதாகமத்தில் மக்களை ஆள்வதற்கும் வழிநடத்தவும் வாழ வைக்கவும் தேவையானது அறிவு என்பதை நன்கு உணர்ந்த சாலமோன் அரசர். ஞானத்தை இறைவனிடம் வரமாக வேண்டி பெற்றுக் கொண்டார். உமது தூய விண்ணகத்திலிருந்து அதை (உமது ஞானத்தை) அனுப்பியருளும். உமது மாட்சிமிக்க அரியணையிலிருந்து அதை வழங்கியருளும். அது என்னோடு இருந்து உழைக்கட்டும். அதனால் உமக்கு உகந்தவற்றை நான் அறிந்து கொள்வேன் (சாஞா 9:9) என வேண்டினார்.

இறைவனின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து மரப்பேழை செய்த நோவா அதை செய்தபோது பலரால் இகழப்பட்டாலும் இறை ஞானத்தின் உதவியால் உலகின் படைப்புகளை காத்து புதிய உலகம் படைத்தார் என்றால் மிகையாகாது. மண்ணுலகில் பெருவெள்ளம் மூழ்கடித்த பொழுது, ஞானம் மீண்டும் அதைக் காப்பாற்றியது: நீதிமானை (நோவாவை) ஒரு சிறிய மரத்துண்டால் வழி நடத்தியது (சாஞா: 10:4) வெற்றி பெற வேண்டுமானால் அறிவைத் தேடு அது காட்டும் பாதையில் பயணம் செய் என்கிறார் நெப்போலியன் ஹில்.

அறிவை நோக்கி தொடர்ந்து செல்லும் பாதையே வெற்றிக்கான வழி– நெப்போலியன் ஹில்

அறிவை வளர்க்க ஒவ்வொரு நாளும் முயற்சி செய்ய வேண்டும் அது எட்டாகனி அல்ல முயன்றால் முடியாதது அல்ல அதை நாடி தேடு என்கிறார் அறிஞர் அண்ணா. மோரை கடைந்து வெண்ணெய் எடுப்பது போல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும் –அறிஞர் அண்ணா

ஐம்பொறிகளைக் கொண்டு உலகில் ஆக்கப்பூர்வமான செயல்கள் செய்வோம்.



# சமூகமும்... சட்டமும்...

சகோதரி. ரோசி. காங்கேயம்,
புனித காணிக்கை அன்னை சபை.

**பெண்களை தொல்லை செய்தல் தடுப்புச் சட்டம்- 1998**

பெண்கள் குடும்பம் என்கின்ற நான்கு சுவர்களுக்குள்ளிருந்து விடுபட்டு சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் காலம் இது. இவ்வாறு பல்வேறு பணிகளுக்காக பெண்கள் வெளியில் நடமாடும் வேளைகளில் பல தொல்லைகளை சந்தித்து வருகின்றனர். இதன் விளைவாக தமிழக அரசு, 1998ம் ஆண்டு 'ஈவ் டீசிங் தடுப்புச் சட்டம் ஒன்றை கொண்டு வந்தது. இச்சட்டம் சமீபத்தில் பெண்களை பல்வேறு தொல்லைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

**நோக்கம் மற்று 3ம் காரணம்**

இச்சட்டத்தின் முகவுரையிலேயே இச்சட்டத்தின் நோக்கமும் காரணமும் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. 'பொது இடங்களில் பெண்கள் கேலிசெய்யப்படுவது தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது. சமீப காலங்களில் கொடுமையான காயங்கள் ஏற்பட்டு, மரணம் சம்பவித்த நிகழ்ச்சி தமிழ்நாடு அரசின் கவனத்தை மிகவும் ஈர்த்துள்ளது. சமுதாய நலன்களினடிப்படையில் இப்பிரச்சினையை உற்று நோக்கும்போது இச்செயல் மிகப் பெரிய கேடானதும் ஆபத்தானதும் அடியோடு ஒழிக்கப்பட வேண்டிய கொடூரமானதும் ஆகும். இச்சட்டம் 1998-ம் ஆண்டு ஆளுநரால் அவசர சட்டமாக வெளியிடப்பட்டு, பின்னர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 30.7.1998-ல் இருந்து அமலுக்கு வந்துள்ளது.

**முக்கிய அம்சங்கள்**

பிரிவு (2) - 'அநாகரிகமான எந்தவொரு நடத்தையும் அல்லது மனிதனின் செயலின் விளைவாக அல்லது அத்தகைய செயலின் மூலம் வர்ணிக்கப்பட்டாலோ, பயம், அசிங்கம் அல்லது பெண் அதிர்ச்சி அடைந்தாலோ மற்றும் இதில் அவதூறு அல்லது காயம் ஏற்படுத்துதல் அல்லது தொல்லை விளைவித்தல் அல்லது தாக்குதல், பெண்ணின் மீது பலத்தை பயன்படுத்துதல் போன்றவை நிகழ்ந்தாலோ இவை கேலி செய்தல்' (ஈவ் டீசிங்) எனப்படும்.

பிரிவு (3)-ன் படி, எந்த இடத்திலும் பெண்களை கேலி செய்தல் (ஈவ் டீசிங்) தடைசெய்யப்படுகிறது. பிரிவு (4)-ன் படி, இக்குற்றத்திற்கு ஒரு வருடத்திற்கு மிகாத சிறைத் தண்டனை அல்லது ரூபாய் பத்தாயிரத்துக்கு மிகாத அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். பிரிவு 5(1)-ன் படி, நிறுவனங்களின் பொறுப்பு வகிக்கும் நபர்கள் இக்குற்றம் நடைபெறாமல் தடுக்கவேண்டும். பிரிவு 5 (2) ன் படி, இவ்வாறு நடவடிக்கை எடுக்க தவறினால் ரூ. 2000 வரை அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு 6-ன் படி, பொதுசேவை வாகன ஓட்டுநர் பாதிக்கப்பட்ட நபர் புகார் செய்யும் போது, காவல் நிலையம் வரை சென்று தகவல் தெரிவிக்க வேண்டும். தவறினால் ரூ. 1000 அபராதம் விதிக்கப்படும்.

பிரிவு 7-ன் படி, பெண்களைக் கேலி செய்யும் குற்றத்திற்காக உறுதுணையாக இருக்கும் வாகனத்தின் ஓட்டுநருக்கு பிரிவு 4-ன் படி தண்டனை வழங்கலாம். மேற்கண்டவாறு வாகனம் பயன்படுத்தப்படவில்லை என நிரூபிக்கப்படாவிட்டால் அந்த வாகனம் பறிமுதல் செய்யப்படலாம்.



# திருக்காட்சிப் பெருவிழா

08.01.2023
முதல்
05.01.2023

**08.01.2023 – ஞாயிற்றுக்கிழமை**
**ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா**
முதல் வாசகம் : எசாயா 60:1-6
இரண்டாம் வாசகம் : எபேசியர் 3:2-3அ, 5-6
நற்செய்தி : மத்தேயு 2:1-12

**09.01.2023 – திங்கட்கிழமை**
ஆண்டவரின் திருமுழுக்கு விழா
முதல் வாசகம் : எசாயா 42:1-4, 6-7 (அ) திரு.பணி10:34-38
நற்செய்தி : மத்தேயு 2:12-17

**10.01.2023 – செவ்வாய்கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 2:5-12
நற்செய்தி : மாற்கு 1:21-28

**11.01.2023 – புதன்கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 2:14-18
நற்செய்தி : மாற்கு 1:29-39

**12.01.2023 – வியாழக்கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 3:7-14
இரண்டாம் வாசகம் : மாற்கு 1:40-45

**13.01.2023 – வெள்ளிக்கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 4:1-5.11
நற்செய்தி : மாற்கு 2:1-12

**14.01.2023 – சனிக்கிழமை**
முதல் வாசகம் : எபிரேயர் 4:12-16
நற்செய்தி : மாற்கு 2:13-17

**15.01.2023 – ஞாயிறு**
பொதுக்காலம் 2-ம் ஞாயிற்றுக்கிழமை
முதல் வாசகம் : எசாயா 49:3, 5-6
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1:1-3
நற்செய்தி : யோவான் 1:29-34



Arise, soldiers of Christ, throw away the works of darkness and put on the armor of light.

- St. Cecilia -

# நலம் தரும்
# இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக்கல்வி..!

## கொய்யா இலை எப்படி மருந்தாக பயன்படுகிறது..!

கொய்யா இலைகளில் ஆல்பா-குளுக்கோசிடேஸ் அதிகம் நிறைந்துள்ளது. இது இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் எதிரியாக செயல்படுகிறது.

உடலில் குளுக்கோஸ் என்கின்ற சர்க்கரை மூல கூறை இது தடுக்கிறது. கொய்யா இலை செரிமான மண்டலத்தில் உள்ள கார்போஹைட்ரேட்டை குளுக்கோஸாக மாற்றும் பல்வேறு நொதிகளைத் தடுக்கிறது. நீரிழிவு நோயைத் தடுப்பதற்கு உதவும்.

குறிப்பிட்ட பயன்பாடுகளுக்கான உணவுகளில் ஒன்றாக கொய்யா இலைகள் செயல் படுகிறது. சுக்ரோஸ் மற்றும் மால்டோஸ் ஆகிய இரண்டு வகையான சர்க்கரைகளை உறிஞ்சுவதைத் தடுப்பதன் மூலம் இலையில் உள்ள சேர்மங்கள் உணவுக்குப் பிறகு இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

கொய்யா இலை செரிமான மண்டலத்தில் உள்ள கார்போஹைட்ரேட்டை குளுக்கோஸாக மாற்றும் பல்வேறு என்சைம்களைத் தடுக்கிறது. இது உங்கள் இரத்தத்தில் எடுத்துக்கொள்வதை குறைக்கும்.

கொய்யா இலைச் சாறு இரத்த சர்க்கரை அளவை மேம்படுத்தி நீண்டகால இரத்த சர்க்கரையை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்து இன்சுலின் சக்தியை அதிகரிக்கும்.

வெள்ளைஇ சிவப்பு கருப்பு மற்றும் காட்டு கொய்யா என்று வகைகள் உண்டு. இதில் அனைத்து வகைகளிலும் நிறைந்த மருத்துவம் உள்ளது. முக்கியமாக சிவப்பு மற்றும் கருப்பு கொய்யக்கள் சிறப்பானது என்று கூறலாம். மூலிகை வளர்ப்பு நிலையங்களில் சிவப்பு ஃகருப்பு கொய்யா செடிகளாக கிடைக்கும்.

## கொய்யா இலையின் மருத்துவ குணங்கள்...

1. இரத்த சர்க்கரை அளவைக் குறைக்க உதவும்.
2. இதய ஆரோக்கியத்தை அதிகரிக்கலாம்.
3. மாதவிடாயின் வலி அறிகுறிகளைப் போக்க உதவலாம்.
4. உங்கள் செரிமான அமைப்புக்கு பயனளிக்கலாம்.
5. எடை இழப்புக்கு உதவலாம்.
6. புற்றுநோய்க்கு எதிராக செயல்படும்.
7. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவலாம்.
8. சருமத்திற்கு நல்லது.
9. கொழுப்பைக் குறைக்கிறது.
10. சளி மற்றும் இருமலை குணப்படுத்தும்.
11. முடி உதிர்தலைத் தடுக்கிறது.
12. பல்வலிக்கு தீர்வு தரும்.
13. தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துகிறது.
14. இரைப்பை குடல் சிக்கல்களைத் தீர்க்கிறது.
15. உங்கள் மூளைக்கு நல்லது.

நலவாழ்வை வளமாக்க நாளும்
இயற்கை வாழ்வியல் முறையை தொடர்வோம்.

நன்றி உறவுகளே...
என்றும் உங்கள் அன்பு சகோதரன்
**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**